**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.**
**அசல் வழக்கு எண். 274/2015**

2025-ம் ஆண்டு ஜூலை மாதம் 11-ம் நாள் வெள்ளிக்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சேகர் | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| த/பெ | : | செல்லபெருமாள் | வயது | : | 50 |
| ஊர் | : | வடபூண்டிபட்டு | தொழில் | : | விவசாயம் |

**பி.வா.சா.1 ( சேகர் ): பிரதிவாதி தரப்பில் முதல் சாட்சியின் குறுக்கு விசாரணையின் :**

நான் வழக்கில் 2-ஆம் பிரதிவாதியாவேன். ஆறுமுக முதலியார் என் பாட்டனார் என்றால் சரிதான். மேற்படி ஆறுமுகத்திற்கு எனது தந்தை செல்லபெருமாள், சுந்தரமூர்த்தி, சரோஜா ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். சரோஜாவின் கணவர் குப்புசாமி என்றால் சரிதான். சரோஜா மற்றும் குப்புசாமிக்கு 11-ம் பிரதிவாதி மணிவண்ணன் மட்டும் தான் வாரிசு என்றால் சரிதான். என்னுடைய தாயார் பாச்சாம்மாள் என்றால் சரிதான். அவருக்கு ஆண் வாரிசுகள் நானும், 1-ம் பிரதிவாதி கணபதி, வாதி சம்மந்தன் மற்றும் 3 பெண் வாரிசுகள் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்த போது என்னுடைய தாயார் எனக்கும், 1-ம் பிரதிவாதிக்கும், வாதிக்கும் உயில் எழுதி வைத்த சொத்திற்காக தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி சொத்தானது வடபூண்டிபட்டு கிராம நஞ்சை சர்வே எண் 149/6-ல் 36 செண்ட் என்றால் சரிதான். மேற்படி சொத்து குறித்து தான் 27.07.1993 தேதியிட்ட உயில் ஒன்றை தாயார் எழுதி வைத்துள்ளார் என்றால் தேதி தெரியாது ஆனால் உயில் ஒன்று எழுதி வைத்தார். மேற்படி உயிலின்படி தாயாரின் காலத்திற்கு பிறகு மேற்படி சொத்தினை வாதி, 1-ம் பிரதிவாதி மற்றும் நானும் சமமாக பிரித்து அனுபவிக்க எழுதி வைத்திருந்தார் என்றால் சரிதான். என்னுடைய அம்மா 30.06.2015 அன்று இறந்தார் என்றால் சரிதான். அவர் இறந்தபிறகு மேற்படி உயிலானது நடைமுறைக்கு வந்தது என்றால் சரிதான். அந்த உயில் சொத்தினை 1 மற்றும் 2-ஆம் பிரதிவாதிகள் அனுபவித்து வந்தார்கள்

என்றால் சரிதான். நான் சொல்வது தவறு என்றும் வாதியும் 1,2 பிரதிவாதியும் சேர்ந்துதான் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி சொத்து சம்பந்தமாக எந்த ஒரு பாகப்பிரிவினையும் ஏற்படவில்லை என்றால் சரிதான். மேற்படி உயில் சொத்தில் வாதி தன்னுடைய 3-ல் 1 பங்கிற்காக இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். ஆனால் எங்களிடம் எதுவும் பாக பிரித்துக்கொடுக்கும்படி கேட்கவில்லை. இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு தாவா சொத்தில் 2 முதல் 20 அயிட்ட சொத்துகளை சேர்க்கக்கோரி நாங்கள் மனு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். மேற்படி மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் தான் மேற்படி சொத்துக்கள் சேர்க்கப்பட்டன என்றால் சரிதான். அதன்பிறகு வாதி 21 முதல் 25 வரை உள்ள அயிட்ட சொத்துக்களை சேர்த்துள்ளார் என்றால் சரிதான் ஆனால் மனு போட்ட பிறகு தான் எனக்கு தெரியவந்தது. வழக்கு சொத்துகள் சம்மந்தமாக ஏற்கனவே 260/2015, 47/2016, 107/2016 என்ற வழக்குகளை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 2 வழக்குகள் வாதியும், ஒரு வழக்கை நானும் தாக்கல் செய்தேன்.

**(கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பாரத்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்

K NALEENI Digitally signed by K NALEENI Date: 2025.07.11 16:50:20 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,(மு.கூ.பொ)
செய்யாறு